
**மே – 02**

# TNPSC துளிகள்

- சேலத்தைச் சேர்ந்த ஆர். ரித்திகா ஸ்ரீ, தமிழ்நாட்டிலிருந்து உருவான இந்தியாவின் முதல் திருநங்கை கிரிக்கெட் நடுவர் ஆனார்.
- கேரளாவில் உள்ள 100-க்கும் மேற்பட்ட ஆக்கிரமிப்பு தாவர இனங்களை அடையாளம் காணும் செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான ஆரம்பகால கண்டறிதல் மற்றும் பல்லுயிர்ப் பாதுகாப்பிற்கு துணை புரிகின்ற செயலியை உருவாக்கியதற்காக என். அலிம் யூசுப்பை உலக வனவிலங்கு நிதியம் (WWF) கௌரவித்துள்ளது.
- பத்மஸ்ரீ விருது பெற்றவரும், புகழ்பெற்ற இந்திய புகைப்படக் கலைஞருமான ரகு ராய் தனது 83 வயதில் டெல்லியில் காலமானார்.
- புனேவில் உள்ள இந்திய வெப்பமண்டல வானிலை ஆய்வு நிறுவனமானது, மௌசம் திட்டத்தின் கீழ் மகாராஷ்டிராவின் மகாபலேஷ்வரில் அருகிலுள்ள பகுதிகளுக்கான நிகழ்நேரக் கண்காணிப்பு மற்றும் குறுகிய கால வானிலை முன்னறிவிப்புகளை மேம்படுத்துகின்ற புதிய X-பட்டை டாப்ளர் வானிலை ரேடாரை நிறுவியுள்ளது.
- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனமானது (DRDO), இந்தியக் கடற்படையுடன் இணைந்து வங்காள விரிகுடாவில் ஒடிசா கடற்கரைக்கு அப்பால் ஒரு ஹெலிகாப்டரில் இருந்து NASM-SR (குறுகிய தூர கடற்படை கப்பல் எதிர்ப்பு எறிகணை) எறிகணையின் முதல் சால்வோ சோதனையை நடத்தியது.
  - சால்வோ சோதனை என்பது ஒரே தளத்தில் இருந்து இரண்டு எறிகணைகளை விரைவாக ஏவுவதாகும்.
- தடுப்பூசிகள் பற்றிய விழிப்புணர்வை பரப்புவதற்காக ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 24 முதல் 30 ஆம் தேதி வரை உலக தடுப்பூசி வாரம் அனுசரிக்கப்படுகிறது.
  - 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "For every generation, vaccines work" என்பதாகும்.

# தேசியச் செய்திகள்


## ஆயுஷ்மான் பாரத் தினம் 2026




- இந்தியாவில் அனைவருக்கும் சுகாதார சேவையை ஊக்குவிப்பதற்காக ஏப்ரல் 30 அன்று இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.
- இது 2018 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட ஆயுஷ்மான் பாரத் பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா (PM-JAY) திட்டத்தை கொண்டாடுகிறது.

- இத்திட்டம் ஒரு குடும்பத்திற்கு ஆண்டுக்கு ₹5 லட்சம் வரை பணமில்லா சுகாதார காப்பீட்டை வழங்குகிறது.
- இது இந்தியா முழுவதும் 10.74 கோடிக்கும் அதிகமான குடும்பங்களுக்கு பயன் அளிக்கிறது.
- இது உலகளாவிய சுகாதாரப் பாதுகாப்புக்கு (UHC) ஆதரவளிக்கிறது மற்றும் உலக சுகாதார நிறுவனத்தின் (WHO) இலக்குகளுடன் ஒத்துப் போகிறது.

## உயரடுக்குப் பிரிவினர் – SC/ST இடஒதுக்கீடு விவகாரம்




- பஞ்சாப் மாநிலம் எதிர் தேவிந்தர் சிங் வழக்கின் விளக்கத்தின் அடிப்படையில், பட்டியலிடப் பட்ட சாதியினர்/பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் SC/ST இட ஒதுக்கீட்டிலிருந்து உயரடுக்குப் பிரிவினரை விலக்கக் கோரிய பொதுநல வழக்கு (PIL) தொடர்பாக மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இந்திய உச்ச நீதிமன்றம் அறிக்கை அனுப்பியுள்ளது.
- தேவிந்தர் சிங் வழக்கில் (2024) 7 நீதிபதிகள் கொண்ட அமர்வு, மிகவும் விளிம்பு நிலையில் உள்ளவர்களுக்கு பலன்களைக் கொண்டு சேர்ப்பதற்காக பட்டியலிடப்பட்ட சாதியினருக்குள் (SC) உள் ஒதுக்கீடு செய்ய அனுமதித்ததே தவிர, உயரடுக்குப் பிரிவினரின் விலக்குக்கு அல்ல.
- உயரடுக்குப் பிரிவினர் கொள்கையானது இந்திரா சாவ்னி எதிர் இந்திய ஒன்றிய வழக்கில் உருவானதுடன் இதில் OBC (இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்) இட ஒதுக்கீடு உறுதி செய்யப்பட்டது, ஆனால் ஒப்பீட்டுச் சமத்துவத்தின் அடிப்படையில் முன்னேறிய பிரிவினர் இதிலிருந்து விலக்கப்பட்டனர்.
- 1993 ஆம் ஆண்டின் அலுவலக குறிப்பாணை (OM) உயரடுக்குப் பிரிவினரை முக்கியமாக அந்தஸ்தின் அடிப்படையில் (வகுப்பு I/II அரசுப் பதவிகள்) வரையறுத்தது, தலைமுறை தலைமுறையாக உள்ள நிறுவன அதிகாரத்தை அங்கீகரித்தது; இதில் வருமானம் என்பது இரண்டாவதாகவே கருதப்பட்டதுடன், மேலும் சம்பளம் மற்றும் விவசாய வருமானம் அதிலிருந்து விலக்கப் பட்டது.
- 2004 ஆம் ஆண்டின் பணியாளர் மற்றும் பயிற்சித் துறையின் (DoPT) கடிதம் பொதுத் துறை நிறுவனங்களின் (PSU) சம்பளத்தை தகுதியிழப்பாகக் கருதிய நிலையில் இது இந்திய ஒன்றியம் எதிர் ரோஹித் நாதன் வழக்கில் ரத்து செய்யப் பட்டதுடன் மீண்டும் அந்தஸ்து அடிப்படையிலான அளவுகோல்கள் மீட்டெடுக்கப் பட்டன மற்றும் பெற்றோரின் சம்பளம் மட்டுமே உயரடுக்குப் பிரிவினரை தீர்மானிக்க முடியாது என தீர்ப்பளிக்கப்பட்டது.

- பி.ஆர். அம்பேத்கர் (1932 லோதியன் கமிட்டி குறிப்பு) பணக்கார/படித்த பட்டியலிடப் பட்ட சாதியினரின் (SC) நபர்களை விலக்குவது "தவறானது" என்று கூறியதுடன் சாதி அந்தஸ்து என்பது சமூகத்தைப் பொறுத்தது என்றும் தனிநபர் முன்னேற்றத்தைப் பொறுத்தது அல்ல என்றும் அவர் வாதிட்டார்.
- 1936 ஆம் ஆண்டு மகர் மாநாட்டில், விளிம்புநிலை சாதிகளைச் சேர்ந்த படித்த மற்றும் பணக்காரர்கள் கூட வேலைகளிலும் பொது வாழ்க்கையிலும் சமூகப் புறக்கணிப்பை எதிர்கொள்கின்றனர் என்று அவர் குறிப்பிட்டார்.
- ஜெயஸ்ரீ பாட்டீல் எதிர் இந்திய ஒன்றிய வழக்கின் தரவுகள், வருமான வரம்புகள் காரணமாக குரூப் D ஊழியர்கள் கூட பலன்களில் இருந்து விலக்கப்பட்டதைக் காட்டிய நிலையில் அதே உச்ச வரம்பு ₹6 லட்சம் மற்றும் ₹24 லட்சம் வருமானம் உள்ள குடும்பங்களைச் சமமாக பாவித்தது.
- இட ஒதுக்கீட்டின் தாக்கம் கிராமப்புறங்களில் உள்ள குறைந்த கல்வியறிவு பெற்ற SC உறுப்பினர்களிடையே குவிந்துள்ளது மாறாக அது ஒரு உயர்நிலை உயரடுக்குப் பிரிவினரிடையே அல்ல.
- இது ஒரு "உயரடுக்குப் பொறியை" உருவாக்குகிறது: சாதி அடிப்படையிலான பின்னடைவுகள் தொடரும் நிலையில், இந்த வருமான வரம்பு மிதமான நிலையான குடும்பங்களை விலக்குகிறது.
- உள்-ஒதுக்கீடு என்பது மிகக் குறைந்த பிரதிநிதித்துவம் கொண்ட SC உட்பிரிவுகளை அடையாளப்படுத்துகிறது, அதே சமயம் உயரடுக்கு விலக்கு என்பது பெற்றோரின் வருமானத்தின் அடிப்படையில் தனிநபர்களை நீக்குகிறது.
- SC/ST அளவுகோல்கள் OBC அளவுகோல்களுக்குச் சமமாக இருக்க முடியாது என்பதை நீதிபதி பி.ஆர். கவாய் ஒப்புக் கொண்டார்.
- மத்திய அரசின் குரூப் A பதவிகளில் SC/ST பிரதிநிதித்துவம் அவர்களின் மக்கள் தொகை பங்கு மற்றும் ஒதுக்கீட்டை விட சற்று குறைவாகவே உள்ளது; நிரப்பப்படாத பின்னடைவுப் பணியிடங்கள் அப்படியே உள்ளன.
- உயரடுக்கு முறையை SC/ST பிரிவினருக்கு விரிவுபடுத்துவது அரசியலமைப்பு ரீதியாகவும் சமூகவியல் ரீதியாகவும் பலவீனமானது என்று வாதிடப்படுகிறது; உள்-ஒதுக்கீடு மற்றும் உயரடுக்கு பிரிவினர் ஆகியவை வெவ்வேறு வழிமுறைகள் என்பதை தெளிவுபடுத்த நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது.

## RTE சேர்க்கை விதி - உச்ச நீதிமன்ற கருத்து

- லக்னோ பப்ளிக் ஸ்கூல் எதிர் உத்தரப் பிரதேச மாநிலம் என்ற வழக்கில், RTE சட்டத்தின் கீழ் அருகிலுள்ள பள்ளிகள் உடனடியாக சேர்க்கை வழங்க வேண்டும் என்று இந்திய உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.
- குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 ஆனது, 6 முதல் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இலவச மற்றும் கட்டாயக் கல்வியை வழங்குகிறது.
- இது கல்வியை அடிப்படை உரிமையாக மாற்றும் சரத்து 21A (86வது திருத்தச் சட்டம், 2002 மூலம் சேர்க்கப்பட்டது) அடிப்படையிலானது.
- இச்சட்டம் தனியார் பள்ளிகளில் EWS (பொருளாதார ரீதியாக நலிவடைந்த பிரிவினர்) மற்றும் பின்தங்கிய குழுக்களுக்கு 25% இடஒதுக்கீட்டை கட்டாயமாக்குகிறது.
- அரசாங்கம் பள்ளிகள், ஆசிரியர்கள் மற்றும் அடிப்படை வசதிகளை வழங்க வேண்டும், மேலும் தனியார் பள்ளிகளுக்கான செலவுகளைத் திருப்பிச் செலுத்த வேண்டும்.

- சரத்து 51A(k) (பெற்றோர்கள் குழந்தைகளுக்கு கல்வி கற்பிக்க வேண்டும்) மற்றும் சரத்து 45 (ஆரம்பகால குழந்தை பராமரிப்பு) ஆகியன பிற விதிகளாகும்.




# பொருளாதாரச் செய்திகள்

## E-PRAAPTI தளம்




- ஊழியர் வருங்கால வைப்பு நிதி நிறுவனமானது (EPFO) EPF கணக்கு நிர்வாகத்திற்காக E-PRAAPTI தளத்தை தொடங்க உள்ளது.
- E-PRAAPTI (செயல்படாத கணக்குகளைக் கண்காணிப்பதற்கான EPF ஆதார் அடிப்படையிலான அணுகல் தளம்) பழைய EPF கணக்குகளைக் கண்காணிக்கவும், இணைக்கவும் மற்றும் செயல்படுத்தவும் உதவுகிறது.
- 36 மாதங்களுக்கு எந்தப் பங்களிப்பும் செய்யப்படாவிட்டாலோ அல்லது UAN உடன் இணைக்கப் படாவிட்டாலோ வருங்கால வைப்பு நிதி (PF) கணக்கு செயல்படாததாகி விடும்.

- UAN (உலகளாவிய கணக்கு எண்) என்பது 2014 ஆம் ஆண்டு முதல் ஊழியர்களுக்கு வழங்கப்படும் 12 இலக்க எண்ணாகும்.
- பழைய கணக்குகளைப் பாதுகாப்பாக அணுகவும் இணைக்கவும் இத்தளம் ஆதார் அடிப்படையிலான அங்கீகாரத்தைப் பயன்படுத்துகிறது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## பஞ்சாயத்து அமைப்புகளின் முன்னேற்றக் குறியீடு 2.0




- ஊரக உள்ளாட்சி அமைப்புகளை மதிப்பிடுவதற்காக 2023-24 ஆம் நிதியாண்டிற்கான பஞ்சாயத்து அமைப்புகளின் முன்னேற்றக் குறியீடு (PAI) 2.0-ஐ பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் வெளியிட்டது.
- PAI என்பது நிலையான வளர்ச்சி இலக்குகளுடன் (SDGs) இணைக்கப்பட்ட குறிக்கோள் குறிகாட்டிகளைப் பயன்படுத்தி கிராம பஞ்சாயத்துகளின் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான ஒரு தேசிய அளவிலான கட்டமைப்பாகும்.
- இது அடிமட்ட அளவிலான கண்காணிப்புக்காக 17 SDG-களை 9 உள்ளூர் மயமாக்கப் பட்ட நிலையான வளர்ச்சி இலக்கு (LSDG) கருத்துருக்களாக மாற்றுகிறது.
- PAI 2.0 சுகாதாரம், நீர் மற்றும் உள்கட்டமைப்பு போன்ற துறைகளில் 150-க்கும் மேற்பட்ட குறிகாட்டிகள் மற்றும் 230 தரவுப் புள்ளிகளைப் பயன்படுத்தி 2.5 லட்சத்திற்கும் மேற்பட்ட பஞ்சாயத்து அமைப்புகளை மதிப்பீடு செய்கிறது.
- இது மதிப்பெண்களின் (0-100 அளவுகோல்) அடிப்படையில் பஞ்சாயத்து அமைப்புகளை சாதனை படைத்தவை, முன்னணியில் இருப்பவை, செயல்திறன் மிக்கவை, இலட்சியம் மிக்கவை மற்றும் தொடக்கநிலையில் உள்ளவை என ஐந்து வகைகளாக வகைப்படுத்துகிறது.
- இதில் சுமார் 97.3% பங்கேற்பு பதிவாகியுள்ளது, 2.59 லட்சத்திற்கும் மேற்பட்ட கிராமப் பஞ்சாயத்து அமைப்புகள் மதிப்பிடப்பட்டன, அவற்றில் 3,635 பஞ்சாயத்து அமைப்புகள் முன்னணியில் இருப்பவையாக உருவெடுத்துள்ளன.
- சுமார் 45.7% பஞ்சாயத்து அமைப்புகள் "செயல்திறன் மிக்கவை" (Performer) என்ற பிரிவில் உள்ளன; எந்தவொரு பஞ்சாயத்து அமைப்பும் ஒட்டு மொத்தமாக A+ (சாதனை

படித்தவை) தரத்தை எட்டவில்லை; மேலும் திரிபுரா, கேரளா மற்றும் ஒடிசா ஆகிய மாநிலங்கள் சிறந்த செயல்திறன் கொண்ட மாநிலங்களாகத் திகழ்கின்றன.

- இந்தக் குறியீடு தரவு உந்துதல் ஆளுகையை ஆதரிக்கிறது, கிராமப் பஞ்சாயத்து மேம்பாட்டுத் திட்டங்களை (GPDPs) தயாரிக்க உதவுகிறது மற்றும் வெளிப்படையான, பங்கேற்பு ஊரக வளர்ச்சியை ஊக்குவிக்கிறது.

## 2025 ஆம் ஆண்டிற்கான இந்தியாவில் பெண்கள் மற்றும் ஆண்கள் அறிக்கை

- புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகமானது 2025 ஆம் ஆண்டிற்கான இந்தியாவில் பெண்கள் மற்றும் ஆண்கள் அறிக்கையின் 27-வது பதிப்பை வெளியிட்டது.
- 1995 ஆம் ஆண்டு முதல் வெளியிடப்படும் ஒரு ஆண்டு அறிக்கையான இது சுகாதாரம், கல்வி, பொருளாதாரம் மற்றும் மக்கள் தொகை ஆகியவற்றின் சமூக-பொருளாதார நிலையை உள்ளடக்கியது.
- பிறப்பு பாலின விகிதம் 917 ஆக (2021–23) மேம்பட்டுள்ளது, மேலும் குழந்தை இறப்பு விகிதம் குறைந்துள்ளது.
- பள்ளிக் கல்வியில் பாலினச் சமத்துவம் எட்டப்பட்டுள்ளது, மேலும் பெண்களின் மொத்த மாணவர் சேர்க்கை விகிதம் (GER) 30.2 ஆக அதிகரித்துள்ளது.
- பெண்களின் தொழிலாளர் பங்கேற்பு, குறிப்பாக கிராமப்புறப் பெண்களிடையே, 37.5% லிருந்து 45.9% ஆக உயர்ந்துள்ளது, மேலும் நிர்வாகப் பொறுப்புகளில் உள்ள பெண்களின் எண்ணிக்கை பெருமளவு அதிகரித்துள்ளது.
- இருப்பினும் 14.4% எழுத்தறிவு இடைவெளி, குறைந்த அளவிலான புற்றுநோய் பரிசோதனை (1.7%) மற்றும் ஊதியம் இல்லாத வேலைகளின் அதிக சுமை போன்ற சிக்கல்கள் இன்னமும் தொடர்கின்றன.




## நகர நிர்வாகம் குறித்த நிதி ஆயோக் அறிக்கை

- நிதி ஆயோக் "Moving Towards Effective City Government: A Framework for Million-Plus Cities" என்ற அறிக்கையை வெளியிட்டது.
- இந்தியாவில் பத்து லட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட 47 நகரங்கள் உள்ளன, இவை நகர்ப்புற மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கைக் கொண்டுள்ளன மற்றும் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு (GDP) சுமார் 60% பங்களிக்கின்றன.
- இந்த நகரங்கள் 74வது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தின் கீழ் உள்ள பலவீனமான

அதிகாரங்கள், போதிய நிதியின்மை, பலவீனமான சேவைகள் மற்றும் தெளிவான தலைமையின்மை போன்ற பிரச்சனைகளை எதிர்கொள்கின்றன.

- நகர அரசாங்கங்கள் சில செயல்பாடுகள் மீது மட்டுமே கட்டுப்பாட்டைக் கொண்டு உள்ளன மற்றும் நிதிக்காக மாநில அரசாங்கங்களை பெரிதும் நம்பியுள்ளன.
- நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மேயர்கள், சேவைகளின் சிறந்த ஒருங்கிணைப்பு மற்றும் மாநில நிதிக் குழுக்கள் (SFCs) மூலம் வலுவான நகராட்சி நிதியாதாரம் ஆகியவற்றை இந்த அறிக்கை பரிந்துரைக்கிறது.
- மேலும் இது நகர்ப்புற ஆளுகை மற்றும் சேவை வழங்கலை மேம்படுத்துவதற்கான சட்ட சீர்திருத்தங்கள் மற்றும் தெளிவான பொறுப்புகளைப் பரிந்துரைக்கிறது.




# மாநிலச் செய்திகள்

## மேற்கு வங்க சட்டசபைத் தேர்தல் 2026 - சாதனை அளவிலான வாக்குப்பதிவு

- 2026 ஆம் ஆண்டிற்கான மேற்கு வங்காள சட்டசபைத் தேர்தலில் சுதந்திரத்திற்குப் பிறகு இதுவரையில் இல்லாத அளவில் அதிகபட்சமாக 92.47% வாக்குப்பதிவை பதிவு செய்துள்ளது.
- தேர்தல்கள் இரண்டு கட்டங்களாக நடைபெற்றன, முதல் கட்டத்தில் (ஏப்ரல் 23) 93.19% மற்றும் இரண்டாம் கட்டத்தில் 91.66% வாக்குகள் பதிவாகின.
- இம்மாநிலத்தில் மொத்தம் சுமார் 6.81 கோடி வாக்காளர்கள் உள்ளனர், இதில் பெண்களின் வாக்குப்பதிவு (92.28%) ஆண்களின் வாக்குப்பதிவை (91.07%) விட அதிகமாக இருந்தது.
- இதற்கு முன் மேற்கு வங்கத்தில் 2011 ஆம் ஆண்டிற்கான சட்டசபைத் தேர்தலில் அதிகபட்சமாக 84.72% வாக்குகள் பதிவாகியிருந்தன.
- 2013 ஆம் ஆண்டிற்கான சட்டசபைத் தேர்தலில் 93.61% வாக்குப்பதிவு செய்து திரிபுரா


தேசிய அளவிலான சாதனையைத் தன்வசம் வைத்துள்ளது.

- மேற்கு வங்கம் மற்றும் பிற மாநிலங்களுக்கான வாக்கு எண்ணிக்கை மே 4 ஆம் தேதி நடைபெறும்.




## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### 1857 ஆம் ஆண்டு தாந்தியா தோபேயின் கடிதம்



- கியான் பாரதம் திட்டத்தின் கீழ் மத்தியப் பிரதேசக் காப்பகங்களில் இருந்து 1857 ஆம் ஆண்டைச் சேர்ந்த தாந்தியா தோபேயின் கடிதம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.
- தாந்தியா தோபே (1814-1859) பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான 1857 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தியப் பெருங்கலகத்தின் முக்கிய தலைவராக இருந்தார்.
- அவர் நானா சாகிப் (இரண்டாம் பாஜி ராவின் வளர்ப்பு மகன்) தலைமையின் கீழ்

பணியாற்றினார் மற்றும் கான்பூரில் நடந்த முக்கியப் போர்களை வழி நடத்தினார்.

- அவர் ராணி லட்சுமிபாயுடன் இணைந்து போர் புரிந்தார், பின்னர் குவாலியரில் கிளர்ச்சிப் படைகளின் கட்டுப்பாட்டை ஏற்றார்.
- முக்கியப் போர்களுக்குப் பிறகு மத்திய இந்தியாவில் தனது எதிர்ப்பைத் தொடர அவர் கொரில்லா போர் முறையைப் பயன்படுத்தினார்.
- அவர் ஆங்கிலேயர்களால் சிறை பிடிக்கப்பட்டு, நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு, 1859 ஆம் ஆண்டு தூக்கிலிடப்பட்டார்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★